சேர்ந்தவர்? இந்த மாதிரி போலியாக சங்கம் வைத்திருப்பதால், ஊராட்சி ஒன்றியங்களுக்கு நேரடியாக ஒரு விலையை அரசு நிர்ணயித்து, அந்த அடிப்படையில் செயல்பட அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அவரும் வருகிறுர். ஆனுல் அவர் சங்கத்தில் என்ன பொறுப்பில் இருக்கிறுர் என்பது எனக்கே கூட தெரியாது.

திரு. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, அவர் மதுரையிலே உள்ள மீன் வியாபாரிகளுடைய சங்கத்திற்குத் தலைவராக இருக்கிறுர். இதுபற்றி அரசின் நிலை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதுபற்றிப் பரிசீலனை செய்யவேண்டும்.

Raising of Crops over Rocky Places.

* 306 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Tamil Nadu State Co-operative Land Development Bank has any proposals to raise crops over rocky places in the State; and

(*b*) if so, the details thereof?

பாறைப் பகுதிகளில் பயிரிடுதல்

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், பாறைப் பகுதிகளில் பயிரிடுவதற்கான செயற்குறிப்புகள், தமிழ்நாடு மாநில நிலவள வங்கியிடம் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) & (இ) இல்லை. வடாற்காடு மாவட்டம், கோடைகால் கிராமத்தில் கடின பாறையால் மூடப்பட்ட ஒரு நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனுல் இன்னும் சோதனை செய்யப்படவில்லை.

1973 மார்ச் 30]

திரு. ஜி. சுவாமிநாதன் : நம்முடைய மாநிலத்தில் பல நல்ல நிலங்கள் இருக்கிற பகுதிகள் இருக்கின்றபோது, பாறைப் பகுதியில் போய் அங்கு பயிரிட முடியுமா என்று ஏன் ஆராய வேண்டும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்போது இருப்பது ஆராய்ச்சி நிலையிலேதானே தவிர வேறொன்றுமில்லை. நிலவள வங்கி, நிலச் சீர்திருத்தத்திற்காக என்று கடனுதவி செய்கிறது. அப்படி, பாறை நிலத்தில் மண்ணை நிரப்பி அங்கே பயிரிடுவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கிட்டுப் பார்ப்பதற்கு சோதனை செய்யப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த முடிவுக்குப் பிறகு —பயிரிட்ட பிறகு என்ன செய்வதாக உத்தேசம்? எவ்வளவு பணம் செலவு செய்ய கூட்டுறவுத் துறைக்கு உத்தேசம்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அது சோதனையின் முடிவைப் பொறுத்திருக்கிறது.

திரு. எல். பலராமன் : கோடைகால் வாலாஜா தாலுகாவில் இருப்பதாக அறிகிறேன். அது அங்கே தான் இருக்கிறதா, அல்லது வேறு எங்கேயாவது இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா? பொறியாளர்களை வைத்து எந்தெந்தப் பகுதியில், எந்த முறையில் செய்கிறார்கள் என்பதை விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சோதனை இன்னும் தொடங்கப்படவில்லை என்று சொன்னேன். கோடைகால் என்ற ஊர் எந்தத் தாலுகாவில் என்று சரியாகத் தெரியவில்லை. அது வந்தவாசிக்குப் போகிற வழியில் இருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது என்று கூறுவார்கள். பாறைப் பகுதியிலே பயிரிடுகிற திட்டத்தை அரசு பரிசீலிக்காமல் அதை ஆரம்பத்திலேயே விட்டுவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, எதையும் சோதனை பார்ப்பதில் தவறில்லை. "தூங்காமை, கல்வி, துணிவுடைமை" என்பது போல புதிய கருத்துக்களை, புதிய படைப்புகளை ஏற்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். எத்தனையோ புதிய கருத்துக்களை கூட்டுறவுத் துறையின் மூலமாகப் புகுத்த முடிந்தது. மாண்புமிகு

[1973 மார்ச் 30

உறுப்பினர் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறபோது, "எங்கே யாவது தவிட்டிலிருந்து எண்ணெய் வடியுமா?" என்று என்னைக் கேட்டு கேலி செய்தார்கள். தவிட்டிலிருந்து எண்ணெய் இப்போது நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். வருடத்திற்கு ரூ. $3\frac{1}{2}$ லட்சம் ரூபாய் லாபம் கொடுத்துக்கொண்டிருக்கிறது அந்தத் தொழில், அதுபோல, புதிதாகச் சோதனை செய்து பார்ப்பதிலே தவறேது மில்லை என்று கருதுகிறேன்.

4-30 பி.ப. திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, சிமெண்ட் தளம் அமைத்து அதில் மண்ணை நிரப்பிப் பயிர் செய்தால் தண்ணீர் சேமிப்பு இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அதேபோல் பாறையில் மண்ணை நிரப்பி விவசாயம் செய்தால் அது லாபகரமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை முழுக்க முழுக்க நான் ஏற்றுக்கொள்கிறேன் ஏனென்றால் சோதனை செய்து பார்த்து, அது எவ்வளவு செலவாகும் என்று கணக்கிட்டுப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இந்தப் பணம் மாநில நில வள வங்கியின் மூலமாகச் செலவிடப் படுகிறது. அரசின் பணமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இதைச் சோதனை செய்ய எவ்வளவு செலவாகிறது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதுவரையில் எவ்வளவு செலவு என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஏக்கர் ஒன்றுக்கு ஏறத்தாழ 5 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, பாறையும் மண்ணும் கலந்த பகுதிகளில் "ராக்பாஸ்பேட்" இருந்தால் ரப்பர் அதிகமாக வளரும் என்பதைப் பரிசீலித்து கேரள அரசு அறிவித்திருக்கிறது. ஏற்கெனவே நமது மாநிலத்தில் உள்ள பாறையோடு மண்ணும் கலந்த பகுதிகளிலே பரிசிலனை செய்வதற்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். இப்போது ஆராய்ச்சியில் இருப்பவை பாறை யாக இருக்கப்பட்ட இடத்திலே மேலே மண்ணைப் பரப்பி அதிலே நீர் ஊற்றி நெற் பயிர் விளைவிக்க வேண்டுமானால், அதற்கான செலவு

1973 மார்ச் 30]

என்ன ஆகிறது, அதற்கு இப்படி நிலச் சீர்திருத்தம் என்ற அளவிலே மாநில நில வள வங்கியிலிருந்து ஏதாவது பண உதவி செய்ய முடியுமா என்பவைதான்.

Loan Applications from Ex-Servicemen

* 307 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the number of applications for loans received from Ex-Servicemen sponsored by the Soldiers', Sailors' and Airmen's Board and now pending in the Office of the Tahsildar, South-East Madras; and

(*b*) the action taken or proposed to be taken for the disposal of the pending applications?

முன்னாள் படை வீரர்களிடமிருந்து கடன் கோரி வந்துள்ள விண்ணப்பங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முப்படை வாரியம் தெரிந்தெடுத்துள்ள முன்னாள் படை வீரரிடமிருந்து வரப் பெற்று, தென் கிழக்குச் சென்னை தாசில்தார் அலுவலகத்தில் தற்போது முடிவு பெறாமல் உள்ள கடன் விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) முடிவு பெறாமலுள்ள விண்ணப்பங்கள் குறித்து முடிவு எடுப்பதற்காக மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) சென்னை தென் கிழக்குப் பகுதியில் முன்னாள் படை வீரர்களிடமிருந்து 1—4—1970 முதல் 25—9—1972 வரை கடன் கோரி 72 விண்ணப்பங்கள் வந்துள்ளன. இந்த 72 விண்ணப்பங்களில், 15 விண்ணப்பங்கள் முடிவுறா நிலையிலுள்ளன.

(இ) முடிவுறா நிலையிலுள்ள விண்ணப்பங்களை முடிவு செய்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து சென்னை, மாவட்ட முப்படை வாரியத்தின் நிர்வாக உட்குழுக் கூட்டங்கள் அனைத்திலும் ஆய்வு செய்யப்படுகிறது.